Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JUNE 22, 2023

வியாழக்கிழமை ஜுன் 22, 2023 | ஒளி: 09 கதிர்: 024 | பக்கம்: 06 | வடக்கு,கிழக்கு | Free

## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பிடிவிறாந்து



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணையில் ஆஜராகாமையை அடுத்தே கண்டி மேலதிக நீதவான் நீதிமன்றத்தின் ஊடாக பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## வடக்கில் 194 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன

■ க. அகரன்

வெறுமனே உரிமை பிரச்சினையோ, அரசியல் பிரச்சினையோ அல்ல எங்களது பிரச்சினைகள். இந்தச் சமூகத்திலே புரையோடிப்போயிருக்கின்ற பல்வேறு உளநல பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டிய தேவையும் அவசரமும் காணப்படுகின்றது என்று வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸ், புதன்கிழமை (21) தெரிவித்தார்.

வவுனியா, கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது, மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

“வடக்கில் சுமார் 194 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. மூடப்பட்ட பாடசாலைகளுக்கான காரணத்தை ஆராய்ந்தபோது, வடக்கில் சுமார் 194 பாடசாலைகளுக்கு மாணவர்கள் இல்லாமையால் மூடப்பட்டிருக்கிறது.

தொடர்ச்சி P2



## நடாஷாவுக்கு விளக்கமறியல்; புருனோவுக்கு பிணை



சமூக ஊடக செயற்பாட்டாளரான புருனோ திவாகரவை பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்ட கொழும்பு, கோட்டை நீதவான் திலின கமகே, நடாஷா எதிரிசூரியவை ஜுலை 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

நகைச்சுவை நடிகை ஜெயனி நடாஷா எதிரிசூரியவுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கணினி குற்றத்தடுப்பு பிரிவினரால் மே 31ஆம் திகதி மாலை கைது செய்யப்பட்ட புருனோ, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

தொடர்ச்சி P2



## குருந்தூர்மலைக்கு கம்மன்பில விஜயம்

### தண்ணிமுறிப்பில் மீள்குடியேற்ற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

■ விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு, தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில விஜயம் செய்வதற்கு முன்னர், குருந்தூர்மலை அடிவாரத்தில் புதன்கிழமை (21) ஒன்றுகூடிய தண்ணிமுறிப்புக்குரிய மக்களும் மக்கள் பிரதிநிதிகள் சிலரும் இணைந்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

தொடர்ச்சி P2

### இனவாத அரசியல்வாதிகளை எதிர்ப்பது அல்ல;

# காணிகளை விடுவிப்பதே தமிழர்களின் நோக்கம்

■ விஜயரத்தினம் சரவணன்

சில பெரும்பான்மையின இனவாத அரசியல்வாதிகள், தமது வாக்கு வங்கியை நிரப்பும் நோக்கத்துடனேயே குருந்தூர் மலைக்கு வருகைதருகின்றனர். அவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது எமது நோக்கமல்ல என்று தெரிவித்த முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என்பதே எமது நோக்கமாகும் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## மனுவை வாபஸ் பெற்றார் போதகர் ஜெரோம்

தன்னை பொலிஸார் கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனு, புதன்கிழமை (21) வாபஸ் பெறப்பட்டது.

ஜெரோம் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஜகத் விக்கரமநாயக்க, புதிய விண்ணப்பத்தை தாக்கல் செய்வதற்கான உரிமையை மீளப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பத்தை மீளப்பெற நீதிமன்றத்தின் அனுமதியை கோரினார். அதற்கமைய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா, எம்.ஏ.ஆர். மரிக்கார் ஆகியோர் அடங்கிய அமர்வு அனுமதி வழங்கியது. உண்மைகளை தவறாக சித்திரிப்பது மற்றும் மறைப்பது தொடர்பாக இந்த மனுவுக்கு எதிரான ஆட்சேபனைகளை சட்டமா அதிபர் முன்வைத்திருந்தார்.

போதகருக்கு எதிராக பணமோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தப்பட்டு வரும் நிலையில், இந்த மனுவை விசாரணை செய்யாமலேயே தள்ளுபடி செய்யுமாறு அரச சட்டத்தரணி மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

தொடர்ச்சி P2

## ‘பெரிய காகமே’ அரசை காக்கிறது



கடந்த ஆண்டு நாட்டு மக்கள் ‘கபுடு காகா’ என்று கடுமையான விமர்சனத்தை வெளிப்படுத்தினார்கள். மக்களால் வெறுக்கப்பட்ட ‘பெரிய காகம்’ தான் இந்த அரசாங்கத்தை பாதுகாக்கிறது. போராட்டம் ஊடாக, ஜனாதிபதி மாத்திரம் தான் பதவி விலகினார். ஆனால், அவருடன் இணக்கமாக செயற்பட்டவர்கள் அரசாங்கத்தில் உள்ளார்கள் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## நாமலின் வெளிநாட்டு பயணத்தடை நீக்கம்



கிரிஷ் நிறுவனத்துக்குச் சொந்தமான 70 மில்லியன் ரூபாய் நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில், ஹம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு விதிக்கப்பட்ட பயணத்தடையை நீக்குமாறு கொழும்பு, கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் திலின கமகே, புதன்கிழமை (21) உத்தரவிட்டார்.

70 மில்லியன் முறைகேடு தொடர்பான சட்ட ஆலோசனையை விரைவுபடுத்துமாறு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு நினைவூட்டல் அனுப்பியது.

தொடர்ச்சி P2

## சொத்து விவரங்களை வருடாந்தம் பகிரங்கப்படுத்த வேண்டும்



அரசியல்வாதிகள் உட்பட உயர்பதவிகள் வகிக்கும் அனைவரும் தமது சொத்து விவரங்களை வெளிப்படுத்த வேண்டும் என்றும் வருடாந்தம் சொத்து விவரங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என்றும் நீதி,சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## புலிகளின் முக்கிய தலைவருக்கு விளக்கமறியல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களில் ஒருவரான செல்வபாக்கியம் சுதாகரன், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவில் தலைமறைவாகி இருந்தபோது, இலங்கையால் விடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ அறிவித்தலின் பிரகாரம், சர்வதேச பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்ட செல்வபாக்கியம் சுதாகரன் தொடர்பில் சட்டமா அதிபர் விடுத்திருந்த ஆலோசனைக்கு அமையவே அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை

## எதிர்காலத்துக்கு மாத்திரம் செல்லுபடியாக்க கூடாது



அரசாங்கம், ஊழல் எதிர்ப்பு சட்ட மூலத்தை கடந்த காலத்துக்கு செல்லுபடியாக்காமல் எதிர்காலத்துக்கு மாத்திரம் செல்லுபடியாகும் வகையில் அமல்படுத்துவதாக இருந்தால், இதன் மூலம் அரசாங்கத்தின் நோக்கம் என்ன என்பது எதிர்க்கட்சிகளுக்கு தெளிவாகி இருக்கிறது என்று எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## நுளம்பு பெருகும் இடங்களை அழியுங்கள்



நாட்டில் கடந்த 3 வாரங்களில் 7,069 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ள நிலையில், நுளம்புகள் பெருகும் இடங்களை அழிக்குமாறு சுகாதார அமைச்சு மக்களை அறிவுறுத்தியுள்ளது.

நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 46,473 ஆக உயர்வடைந்துள்ளது.

மேலும், மேல் மாகாணத்தை மையமாகக் கொண்டு இந்த வாரமும் எதிர்வரும் வாரமும் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய மட்டத்திலும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு மட்டத்திலும் இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

6 மாவட்டங்களின் 67 சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுகள் தொடர்ந்தும் டெங்கு அபாய நிலைமை காணப்படுவதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது. கம்பஹா, கொழும்பு, களுத்துறை, கண்டி, குருணாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களிலேயே இந்த டெங்கு அபாய நிலைமை காணப்படுகின்றது.

தொடர்ச்சி P2

## ஒட்டுமொத்த பணவீக்கம் 22.1 சதவீதமாக குறைந்தது

தேசிய நுகர்வோர் விலை சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு அளவிடப்படும் ஒட்டுமொத்த பணவீக்கமானது 22.1 சதவீதமாகக் குறைந்துள்ளதாக தேசிய தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பணவீக்கமானது, 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 33.6 சதவீதத்திலிருந்து மே மாதத்தில் 22.1 சதவீதமாகக் குறைந்துள்ளது.

மே மாதத்திற்கான பணவீக்கமானது முக்கியமாக உணவு மற்றும் உணவு அல்லாத குழுக்களில் நிலவிய உயர் விலை நிலைகளால் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## “மனித கடத்தல்காரர்களுடன் தொடர்புகளை பேணவில்லை”

### அமைச்சர் மனுஷ தெரிவிப்பு



“நான் ஒரு போதும் எந்தவொரு மனித கடத்தல்காரர்களுடனும் தொடர்புகளை பேணவில்லை. சமூக வலைத்தளங்களில் வெளியாகும் செய்திகளில் உண்மையில்லை” என்று தெரிவித்த தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, நான் மனித கடத்தல்காரர்களுக்கு அடிபணிந்து செயற்பட்டிருந்தால், அதுதொடர்பில் பிரதான ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கும்; பாராளுமன்றத்திலும் பேசப்பட்டிருக்கும் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## நுவரெலியா தபாலகத்தை விற்பதற்கு எதிர்ப்பு



■ செ.திவாகரன்

நுவரெலியாவின் அடையாளச் சின்னமாக கடந்த 130 வருடங்களுக்கு மேலாகத் திகழும் நுவரெலியா தபால் நிலையத்தை விற்பதற்கு எதிராக புதன்கிழமை (21) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஆங்கிலேயர்கள் நுட்பத்தின்படி சிவப்பு செங்கல் கொண்டு, நுவரெலியா பிரதான நகரின் மையத்தில் கட்டப்பட்டுள்ள நுவரெலியா தபால் நிலையம், இலங்கையின் பழைமையான கட்டடங்களில் ஒன்றாகும். நுவரெலியாவில் விலைமதிப்பற்ற வளமாக கருதப்பட்ட நுவரெலியா தபால் நிலையத்தை இலங்கையின் முதன்மை சுற்றுலா ஊக்குவிப்பு நிறுவனமான ‘ஜெட்வின்’ நிறுவனத்திடம் ஒப்படைக்க யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சுமார் ஆறு வருடங்களுக்கு முன்பிருந்தே இதற்குப் பலரும் எதிர்ப்பு தெரிவிப்பதுடன், பிரதானமாக நுவரெலியா மக்கள் பல்வேறு வழிகளில் தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தபால் நிலைய ஊழியர்கள் பணி பகிஷ்கரிப்பிலும் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வடக்கில் 194 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன

இதற்கான காரணமாக, கிராமப்புறங்களில் இருந்து நகரங்களை நோக்கி மாணவர்கள் நகரத் தொடங்கியிருக்கின்றமையும், பிறப்பு வீதம் குறைந்து செல்வதாகவும் கூறப்படுகிறது.

இதே காரணத்தை கிழக்கிலே மட்டக்களப்பில் 07 வருடங்கள் அரச அதிபராக கடைமையாற்றும் போதும் கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகளை மூடிக்கொண்டிருந்தோம்.

மேலும் இதற்கும் காரணமாக பிரதேச செயலாளர்களால் பிறப்பு வீதம் குறைவடைந்து வருகின்றமை மற்றும் 01ஆம் வகுப்பிலே மாணவர்களை அனுமதிப்பதில் சில பாடசாலைகள் பூச்சிய மட்டத்தில் காணப்படுவதாகவும் எனக்கு தெரிவிக்கப்பட்டது.

எனவே இந்த விடயங்கள் புலம்பெயர்ந்த சமூகத்தினாலும் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்ற சமூகத்தினாலும் கணக்கில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் என நான் கருதுகின்றேன். நாங்கள் வாழவைக்க வேண்டும் என எண்ணுகின்ற எங்களது சமூகம், நாங்கள் வளமாக இருக்க வேண்டும் என நினைக்கின்ற மக்கள், இந்தப் பிரதேசம் எதை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்பதை உணர்வீர்கள் என நான் நினைக்கிறேன். சில புள்ளிவிவரங்கள் இச்சமூகத்திலே சில விடயங்கள் அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கின்றன.

குறிப்பாக விவாகரத்து அதிகரித்து காணப்படுதல், குழந்தை பேறு குறைவடைந்துள்ளமை, வயது சென்ற திருமணங்கள் அதிகரித்து காணப்படுதல் மற்றும் குடிபோதை, போதைவஸ்து, தற்கொலை போன்ற பல்வேறு சமூக பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே இவற்றை எல்லாம் கடந்து இச் சமூகம் வாழ வேண்டும் என்றால் இந்தச் சமூகத்துக்கு புலம்பெயர்ந்த சமூகம் ஆற்ற வேண்டிய பணிகள் நிறைய இருக்கின்றன என்றார்.

# ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பிடிவிறாந்து

பெண்ணொருவரை திருமணம் செய்து கொள்வதாக உறுதியளித்து 10 இலட்சம் ரூபாயை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக 2010ஆம் ஆண்டு, கண்டி விசேட குற்ற விசாரணைப் பிரிவினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த வழக்கு, புதன்கிழமை (21) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, நீதிமன்றத்தில் ஆஜராகாமையை அடுத்து இவ்வாறு பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு பிடிவிறாந்து பிறப்பித்து உத்தரவிட்டுள்ள கண்டி மேலதிக நீதவான் மொஹமட் ராபி, அந்த வழக்கு விசாரணை செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த ஆசிரியை ஒருவரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குருந்தூர்மலைக்கு கம்மன்பில விஜயம்

அதன்படி தண்ணிமுறிப்புப் பகுதியில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறும், தண்ணிமுறிப்புப் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யுமாறும் வலியுறுத்தியே இவ்வாறு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அத்தோடு திட்டமிடப்பட்ட சிங்களமயமாக்கல் மற்றும், பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளுக்கு ஆர்ப்பாட்டக்காரர்களால் இதன்போது கடுமையான எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டது.

# காணிகளை விடுவிப்பதே தமிழர்களின் நோக்கம்

முல்லைத்தீவு, தண்ணிமுறிப்பு, ஆண்டான் குளம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் 1984ஆம் ஆண்டு தமது பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில், இதுவரையில் அவர்களது பகுதிகளில் மீள்குடியமர்த்தப்படாத நிலையில், அவர்களை குறித்த பகுதிகளில் மீள்குடியேற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

குருந்தூர்மலையில் புதன்கிழமை (21) இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், “குருந்தூர் மலை விவகாரம் தொடர்பிலான வழக்கு முல்லைத்தீவு நீதிமன்றில் நிலுவையிலுள்ள நிலையில், முல்லைத்தீவு பொலிஸாரோ, தொல்லியல் திணைக்களமோ அல்லது, பௌத்த பிக்குகளோ நீதிமன்றை மதிப்பதாகத் தெரியவில்லை.

தமிழ்த் தரப்புகளான நாம்தான் நீதிமன்றத்தினதும், நீதிபதியினதும் கட்டளைகளை மதித்து நடக்கின்றோம்.

இந்நிலையில் கொழும்பிலே இருக்க வேண்டிய, கொழும்பைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர், இனவாதத்தைத் தூண்டும் விதமாக குருந்தூர் மலைக்கு வருகைதருவதும், பார்வையிடுவதுமாகச் செயற்படுகின்றார்கள்.

தெற்கிலே தமது வாக்குவங்கியைப் பலப்படுத்துவதற்காகவே சில இனவாத அரசியல்வாதிகள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

குருந்தூர்மலையை அண்டிய பகுதியிலுள்ள தமிழ் மக்களுக்குரிய 306 ஏக்கர் காணிகளை அபகரிக்கும் நோக்கத்துடன் தொல்லியல் திணைக்களம் செயற்படுகின்றது.

இந்நிலையில் இந்த குருந்தூர்மலையை அண்டிய காணிவிடயம் தொடர்பாக அண்மையில் எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியிருந்தனர். அப்போது ஜனாதிபதி இந்தக் காணிகளை விடுவிக்குமாறு உரியவர்களுடன் பேசியிருந்தபோதும், தொல்லியல் திணைக்களத்தினர் தொடர்ந்தும் அபகரிப்புச் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டுவருகின்றனர்.

இந்தக் காணிகள் அனைத்தும் தமிழ் மக்களுடைய வாழ்வாதார விவசாயக் காணிகளாகும். இவ்வாறான காணிகளை அபகரித்து, இங்கு பௌத்தவிகாரைகளை அமைத்து, சிங்களக்குடியேற்றங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகள் முனைப்புப்பெற்று வருகின்றன.

இவ்வாறான சிங்களமயமாக்கல் செயற்பாடுகளுக்கு எதிராகவும், பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளுக்கு எதிராகவும் நாம் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும்போது, பௌத்த வழிபாடுகளுக்கு எம்மால் இடையூறு ஏற்படுத்தப்பட்டதாக பௌத்த பிக்குகளால் எம்மீது வழக்குத் தொடரப்படுகின்றது.

அத்தோடு தொல்லியல் திணைக்களத்தினர் தமது செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக எம்மீது வழக்குத் தொடர்கின்றனர். இந்நிலையில் தமது காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்களமக்களுக்கு வழங்கப்பட்டுவிடுமோ என எமது தமிழ் மக்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர்” என்றார்.

# நடாஷாவுக்கு விளக்கமறியல்; புருனோவுக்கு பிணை

“‘மோடாபிமானய’ என்ற நிகழ்ச்சியில் பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் நகைச்சுவை மேடைப் பேச்சாளர் நடாஷா எதிரிசூரிய 28ஆம் திகதி அதிகாலை கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

நடாஷா எதிரிசூரியவின் வாக்குமூலத்தை நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், நடாஷாவின் மேடை நிகழ்ச்சியை காணச் சென்றவர்கள் குறித்தும் விசாரணைகள் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ‘பெரிய காகமே’ அரசை காக்கிறது

மக்களால் வெறுக்கப்பட்டு குறுகிய காலம் அமைச்சு பதவிகளில் இருந்து விலகி இருந்தவர்களுக்கு, ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர், அமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளன என்றும் அடிப்படை கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்தாமல் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது என்றார். பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

“சர்வதேச நாணய நிதியம், சர்வதேசம் ஆகியவற்றின் அழுத்தங்களுக்கு அமையவே தற்போது சட்டமூலங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சட்டங்களை இயற்றி விட்டோம் என்று சர்வதேசத்திடம் குறிப்பிட்டு விட்டு அரசாங்கம் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்கிறது. இயற்றப்படும் சட்டங்கள் ஏதும் முறையாக அமுல்படுத்தப்படுவதில்லை என்றார்.

# மனுவை வாபஸ் பெற்றார் போதகர் ஜெரோம்

இதேவேளை, தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தாக்கல் செய்த மனு மீதான பரிசீலனைக்கான தினமாக ஜூலை 28ஆம் திகதியை உயர்நீதிமன்றம் நிர்ணயித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் முக்கிய தலைவருக்கு விளக்கமறியல்

இந்தியாவில் இருந்து நாடு கடத்தப்பட்டதன் பின்னர், தங்களுடைய பிரிவில் 90 நாள்கள் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தியதாக பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

எல்.ரி.ரி.ஈ அமைப்பு தொடர்பில் இந்நாட்டு படையினருக்கு தகவல்களை வழங்கிய நபர்களை, படுகொலை செய்தல் உள்ளிட்டவை இந்தச் சந்தேகநபர் உள்ளிட்ட குழுவினரால் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. அதற்கான திட்டங்களை இக்குழுவினர் தீட்டி வந்ததாக விசாரணைகளின் ஊடாக தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

**“ எல்.ரி.ரி.ஈ அமைப்பு தொடர்பில் இந்நாட்டு படையினருக்கு தகவல்களை வழங்கிய நபர்களை, படுகொலை செய்தல் உள்ளிட்டவை இந்தச் சந்தேகநபர் உள்ளிட்ட குழுவினரால் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது**

மூதூர் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட மேற்படி நபர், 2019 ஆம் ஆண்டு நாட்டை விட்டு தப்பியோடியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண பிரபல தலைவரான ‘இலங்கீத் மாஸ்டர்’ என்பவருடனேயே இவர் தப்பியோடியுள்ளார் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. இவ்விருவரும் இந்நாட்டுக்குள் புலிகள் அமைப்பை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நிதி சேகரித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்துள்ளனர் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது என்றும் நீதிமன்றத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

# எதிர்காலத்துக்கு மாத்திரம்...

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை சமர்ப்பித்து உரையாற்றிய அமைச்சர் விஜயதாஸவின் கருத்தொன்றுக்கு மறுப்பு தெரிவித்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், “இந்தச் சட்டமூலத்தில் இடைக்கால உறுப்புரை ஒன்றை ஏற்படுத்தி இருப்பதாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் தெரிவிக்கலாம். ஆனால், கடந்த கால மோசடிகளை சட்டத்துக்கு முன் கொண்டுவர இடைக்கால உறுப்புரை போதுமானது அல்ல! அதனால் அதற்கு தனிப்பட்ட உறுப்புரை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு” என்றார். இதற்கு பதிலளித்த அமைச்சர் விஜயதாஸ, “கடந்தகால மோசடிகளுக்கும் இந்தச் சட்டம் செல்லுபடியாகும் வகையில் தனியான உறுப்புரை ஒன்றை ஏற்படுத்த சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்படுகிறது” என்றார்.

# நாமலின் வெளிநாட்டு பயணத்தடை நீக்கம்

இந்த விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படக் கூடிய சட்ட நடவடிக்கை தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இன்னும் பெறவில்லை என்று நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டது.

இலங்கையில் ரக்பி விளையாட்டின் அபிவிருத்திக்காக இந்திய நிறுவனமான கிரிஷ் லங்கா பிரைவேட் லிமிடெட் வழங்கிய 70 மில்லியன் ரூபாயை முறைகேடாக பயன்படுத்தியதாக ஜே.வி.பியின் முன்னாள் எம்.பியான வசந்த சமரசிங்க வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

கிரிஷ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட பணத்தை நிறுவனத்தின் உண்மையான நோக்கத்துக்கு பயன்படுத்தாமல் சந்தேகநபர் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**“ நாமலிடம் இரண்டு தடவைகளில் அந்தப் பணத்தை கொடுத்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது**

சிலோன் பிரிமியம் ஸ்போர்ட்ஸ் தலைவர் நிஹால் ஹேமசிறி பெரேராவிடம் இலங்கையின் ரக்பி அபிவிருத்திக்காக கிரிஷ் நிறுவனத்தால் 70 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

நிஹால் ஹேமசிறி பெரேராவுக்குச் சொந்தமான வங்கிக் கணக்குக்கு கிரிஷ் நிறுவனம் பணத்தை அனுப்பியதாகவும், பின்னர் அவர், நாமல் ராஜபக்ஷவிடம் இரண்டு தடவைகளில் அந்தப் பணத்தை கொடுத்துள்ளதாகவும் நிதிக்குற்ற புலனாய்வுப் பிரிவினர் நடத்திய ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.

# சொத்து விபரங்களை...

ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை புதன்கிழமை (21) பாராளுமன்றத்தில்சமர்ப்பித்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், “2022 ஆம் ஆண்டு மே மாதம் இடம்பெற்ற ஆட்சிமாற்றத்தை தொடர்ந்து ஊழல் எதிர்ப்பு சட்டத்தை உருவாக்க தீர்மானிக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற துறைசார் மேற்பார்வை குழு கூட்டத்தின் போது முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பில் இறுதியான தீர்மானத்தை எடுக்க முடியவில்லை. இதற்கமைய இன்று (நேற்று) சட்டமூலம் மீதான விவாதத்தை ஆரம்பித்து கட்சி தலைவர்களின் இணக்கப்பாட்டுடன் எதிர்வரும் பாராளுமன்ற கூட்டத்தொடரில் இரு நாள் விவாதத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்கள் அரசியலமைப்பு பேரவையின் ஊடாகவே நியமிக்கப்படுவார்கள். இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு ஓய்வு பெற்ற நீதிபதிகள்,பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்படுவது குறித்து மக்கள் மத்தியில் மாறுப்பட்ட கருத்து காணப்படுகிறது.

# மனித கடத்தல் காரர்களுடன் தொடர்புகளை பேணவில்லை

வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறையை மனிதக் கடத்தல்காரர்களின் பிடியில் இருந்து விடுவிக்க முழு வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையையும் டிஜிட்டல் மயமாக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

‘ஸ்திரமான நாட்டிற்கு, அனைவரும் ஒரு வழிக்கு’ என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை (20) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மீதானதேவையற்ற தலையீடுகளை தடுக்கவும், சட்டவிரோத நடவடிக்கைகளை நிறுத்தவும் இதன் ஊடாக வாய்ப்பு ஏற்படும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் இதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியமைச்சு குழுவொன்றை நியமித்துள்ளதாக மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், “நாடு வீழ்ந்த சமயத்தில் தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றார். பாராளுமன்ற உறுப்பினர்கள் வீதியில் கொல்லப்பட்டனர். பயங்கரவாதக் குழு இந்த நாட்டில் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றது. ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை வீழ்ந்த இடத்திலிருந்து தூக்கி நிறுத்தினார்.

அன்று 80 சதவீதமாக இருந்த பணவீக்கம் இன்று 25 சதவீதமாக குறைந்துள்ளது என்றார்.

# நுளம்பு பெருகும்...

அடுத்த மாதம் அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் நிலைமை காணப்படுவதன் காரணமாக, டெங்கு அபாயம் மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியம் காணப்படுவதாக சுகாதார பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

# ஒட்டுமொத்த பணவீக்கம் 22.1 சதவீதமாக குறைந்தது

ஏப்ரல் மாதத்தில் 27.1 சதவீதமாக காணப்பட்ட உணவுப் பணவீக்கம் மே மாதத்தில் 15.8 சதவீதமாகக் குறைந்துள்ளதாகவும், உணவு அல்லாத பணவீக்கம் 39.0 சதவீதத்தில் இருந்து 27.6 சதவீதமாகக் குறைந்துள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# நுவரெலியா தபாலகத்தை விற்பதற்கு எதிர்ப்பு

மீண்டும் இந்தப் பழைமையான கட்டடத்தை தன்வசமாக்குவதற்கு முயற்சிகள் முன்னெடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தபால் நிலையத்தைச் சுற்றி கறுப்பு கொடி கட்டி, தபால் நிலையத்திற்கு முன்பாக தபால் ஊழியர்களும் பொது மக்களும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கைகளில் பதாகைகளை தாங்கியவாறும், கோஷம் எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர்.

இதன் போது தபால் நிலையத்திற்கு சேவைகள் பெற வந்தவர்களிடன் துண்டுப்பிரசுரம் விநியோகம் செய்து கையெழுத்தும் சேகரிக்கப்பட்டது.

இப்போராட்டத்தில் இலங்கை தபால் அதிகாரிகள் சங்கம், இலங்கை தபால் ஊழியர்கள் சங்கம், அகில இலங்கை தபால் தந்தி ஊழியர்கள் சங்கம், தபால் மற்றும் தொலைத் தொடர்பு சங்கங்கள் இணைந்து கொண்டிருந்தன.

இங்கிலாந்தின் SAINSBURY WACTHAMSTO நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட சுமார் 40 அடி உயரம் கொண்ட அழகிய கடிகாரம், பித்தளை மற்றும் உருக்கினால் அமைக்கப்பட்டுள்ளதுடன் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கட்டட மூலப்பொருட்களைக் கொண்டே இவ்வழகிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு பெரும்பாலும் தேக்கு மரங்களே உபயோகப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நலன்புரி கொடுப்பனவுக்கான மேன்முறையீடுகளை

# 30க்கு முன்னர் சமர்ப்பிக்கவும்

■ எம்.எஸ்.எம் ஹனீபா

அம்பாறை மாவட்டத்தில் நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ள தெரிவு செய்யப்படாதவர்கள், மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகள் இருந்தால் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் புதன்கிழமை (21) தெரிவித்தார்.

இத்திட்டத்துக்காக முதற்கட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்து, தகவல் கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்கள், மக்கள் தொகை கணக்கெடுப்பில் வழங்கப்பட்ட தகவல்களில் தவறுகள் இருக்குமானால், இந் நபர்களும் தகுதியானவர்களின் பட்டியலில் தங்களின் பெயர் குறிப்பிடப்படவில்லை என கருதுபவர்களும் மேன்முறையீடு செய்யலாம். கணக்கெடுப்பு உத்தியோகத்தர் வீட்டுக்கு வரவில்லை அல்லது தரவு சேர்க்கப்படவில்லை போன்ற விண்ணப்பதாரர்களும் தமது உரிமைக் கோரிக்கைக்காக மேன்முறையீடு செய்யலாம்.



நலன்புரி கொடுப்பனவுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் விவரங்கள் பிரதேச செயலகங்களிலும் கிராம சேவகர் அலுவலகங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை அந்தந்த பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார்.

# ‘யூடியூப்’ பார்த்து துப்பாக்கி தயாரித்த இருவர் கைது

‘யூடியூப்’ பார்த்து துப்பாக்கி தயாரித்த மாமாவும் மருமகனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை பிரிவு குற்றப் புலனாய்வு பிரிவினரால் திங்கட்கிழமை (19) கைது செய்யப்பட்ட இருவரிடமிருந்தும் T-56 ரக துப்பாக்கி, 5 அடி நீளமான வேறு ரக துப்பாக்கி, ரவைகள், துப்பாக்கி தயாரிக்க பயன்படுத்தப்படும் இரண்டு கிரைண்டர்கள் மற்றும் கிரில் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிகளை பயன்படுத்தி சந்தேக நபர்கள் ஏதேனும் குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளார்களா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

பதுரலிய, சீலதொல பிரதேசத்தைச் சேர்ந்த 41 மற்றும் 21 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விருவரும் கடந்த அரகலயவின் போது, 14 இலட்சம் ரூபாய் பெறுமதியான வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள், வர்த்தக நிலையங்களுக்கு தீ வைத்து எரித்தனர் என்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டவர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்ட இவ்விரு சந்தேகநபர்களையும் மத்துக நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருக்கோவில் விவசாயிகளுக்கு

# நீர்ப் பம்பிகள் வழங்கி வைப்பு




■ எஸ். கார்த்திகேசு

திருக்கோவில் பிரதேசத்தில், விவசாய அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக, உலக வங்கியின் நிதிப் பங்களிப்புடன் நிலக்கடலை, மிளகாய் செய்கையாளர்களுக்கு நீர் பம்பிகள் மானியமாக திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரன் தலைமையில் பிரதேச செயலக வளாகத்தில் நேற்று (21) வழங்கி வைக்கப்பட்டன.

அந்தவகையில், தங்கவேலாயுதபுரம், விசாயகபுரம் ஆகிய விவசாயக் கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு நீர்இறைக்கும் பம்பிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில், திருக்கோவில் உதவி பிரதேச செயலாளர் கே. சதிசேகரன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் அனோஜா உஷாந், கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் ஏ. கந்தசாமி, திட்ட உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

யாழ். துணை தூதரகத்தின் ஏற்பாட்டில்

# கலாசார மத்திய நிலையத்தில் யோகா நிகழ்வுகள்

■ நிதர்சன் வினோத்

யாழ். இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் ஒன்பதாவது சர்வதேச யோகா தின நிகழ்வுகள், நேற்று (21) யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டது,

யாழ் இந்திய துணைத் தூதுவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில், யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர், யாழ்ப்பாண படைகளின் கட்டளைத் தளபதி, வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். இந்திய துணை தூதரக அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

யோகா பயிற்சி நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், கல்வியிலாளர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டிருந்தனர். இவர்களுக்கு விசேட சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.



# காலி மாவட்டத்தில் 200 ஸ்மாட் வகுப்பறைகள்



காலி மாவட்டத்தில் உள்ள 200 பாடசாலைகளில் நவீன கணினி கூடங்கள் மற்றும் ஸ்மாட் திரைகளை நிறுவும் பணிகளை துரிதப்படுத்துவதற்கான இராஜதந்திர ஆவணங்கள் இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என். ரணசிங்கே ஆகியோரிடையில் திங்கட்கிழமை (19) பரிமாறப்பட்டன.



# கதிர்காமத்தில் இருந்து வந்த பஸ் விபத்து

■ வி.ரி சகாதேவராஜா, நூருல் ஹுதா உமர்

கதிர்காமத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த பஸ் சம்மாந்துறையில் கட்டுப்பாட்டை இழந்து, வாய்க்காலுக்குள் பாய்ந்து, மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

சம்மாந்துறை - கல்முனை பிரதான வீதியில் மல்வத்தையில் (வட்டிவுட்டி) நேற்று (21) அதிகாலை 2.00 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கதிர்காமத்தில் இருந்து இரவு பத்து மணியளவில் புறப்பட்டு, சம்மாந்துறை வழியினூடாக மட்டக்களப்பு நோக்கி சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றே, இவ்வாறு விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் சாரதி உட்பட 10 பேர் காயமடைந்து சம்மாந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



# ஜப்பானின் சுற்றுலா ஏற்பாட்டாளர்களுடன் கிழக்கு மாகாண ஆளுநர் கலந்துரையாடல்

■ நூருல் ஹுதா உமர், ஹஸ்பர்

டோக்கியோவில் உள்ள இலங்கை தூதரகத்தில் ஜப்பானின் மிகப்பெரிய சுற்றுலா ஏற்பாட்டாளர்களுடன் விரிவான கலந்துரையாடல்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மேற்கொண்டார்.

இக்கலந்துரையாடலில், கிழக்கு மாகாணம் மற்றும் மலையகம் ஆகிய இரண்டு பிராந்தியங்களிலும் தனிப்பட்ட அனுபவத்தைப் பெறுவதற்காக பார்வையிட வருமாறு, சில சுற்றுலா தளங்களை செந்தில் தொண்டமான் பரிந்துரை செய்தார்.

கிழக்கு மாகாணத்தில் டொல்பின்கள், திமிங்கிலங்களைப் பார்வையிடுவது, அறுகம்பே, சர்ஃபிங், ஸ்கூபா டைவிங், பவளப்பாறை, படகு சவாரி, வனவிலங்கு சரணாலயம், பறவைகள் சரணாலயம், மான் நகரம், தொல்லியல் மற்றும் கலாசார தளங்கள், இயற்கை சுற்றுலா தளங்கள் என்பனவும் மலையகத்தில் மலைக் காட்சிகள், மலையேற்றம், முகாமிடுதல், தேயிலை தொழிற்சாலைகள், உலக முடிவு இயற்கை சுற்றுலா தளம், ஒன்பது வளைவு பாலம், லிப்டன் சீட், நக்கிள்ஸ் மலைத்தொடர் போன்ற இடங்கள் செந்தில் தொண்டமானால் பரிந்துரை செய்யப்பட்டன.

ஜப்பானின் சுற்றுலா ஏற்பாட்டாளர்கள், இலங்கையின் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக தமது முழுமையான ஒத்துழைப்புகளை வழங்குவதாக உறுதியளித்தனர்.

இதற்குமுன்னதாக, ஜப்பான் பாராளுமன்றத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநர் செந்தில் தொண்டமான், இலங்கை - ஜப்பான் நாடுகளின் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தல், இருதரப்பு சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல் குறித்தும் கலந்துரையாடினார்.

மியாசாகி பாராளுமன்ற உறுப்பினர் ஷிம்பே மட்ஷிதாவை சந்தித்து, கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பது குறித்து கலந்துரையாடினார்.



# விலை குறைந்தாலும் விற்பனை கூடவில்லை

பாணின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டாலும், பேக்கரிகளில் பாண்களின் விற்பனை கூடவில்லை என ஹட்டன் பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். 450 கிராம் பாண் இறாத்தலின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஒரு இறாத்தல் 160 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது. எனினும், விற்பனை அதிகரிக்கப்படவில்லை என்றும் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

**“ 450 கிராம் பாண் இறாத்தலின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஒரு இறாத்தல் 160 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது. எனினும், விற்பனை அதிகரிக்கப்படவில்லை**

கோதுமை மாவின் விலை 15 ரூபாவாலும் சமையல் எரிவாயுவின் விலையும் குறைந்துள்ளது. என்றாலும் பேக்கரி உற்பத்தி பொருட்களுக்கான மூலப்பொருட்களின் விலைகள் குறையவில்லை என்றும் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் கொழும்பு பிரதேச உறுப்பினர்கள் முட்டையொன்றை 35 ரூபாய்க்கு வாங்கிக் கொடுக்கின்றனர். எனினும், ஹட்டன் பிரதேசத்தில் முட்டையொன்று 52 ரூபாய்க்கு சில்லறை விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்றும் தெரிவித்தனர்.

# ‘கெயார்’ அதிகாரியை சந்தித்த உப்புவெளி பெண்கள்

■ வடமலை ராஜ்குமார்

‘கிரிஸலிஸ்’ நிறுவனம் முன்னெடுக்கும் ‘பெண்களை ஆளுகைக்கு உற்படுத்தல்’ வேலைத்திட்டத்தைப் பார்வையிட, ஜேர்மன் ‘கெயார்’ நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி ஜெனீபர், திருகோணமலைக்கு நேற்று முன்தினம் (20) விஜயம் செய்திருந்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் இச்செயற்திட்டம் மூதூர், பன்குளம், பட்டனமும் சூழலும் (உப்புவெளி) ஆகிய பிரதேச சபைகளில் உள்ள 15 சனசமூக நிலையங்களை உள்வாங்கியதாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.



அவரது விஜயத்தின் போது, உப்புவெளி சனசமூக நிலைய பிரதிநிதிகளுடனான சந்திப்பு இடம்பெற்றது.

மேலும், இவ்வாறான ஒரு சந்திப்பு, பன்குளம் பிரதேச சபைக்கு உட்பட்ட கித்துல்உத்து சனசமூக நிலையத்திலும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிஸ்சலிஸ் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் யு.எல் சம்சுதீன், ஆளுகைக்கான தொழில்நுட்ப ஆலோசகர் விமன்ச சொய்சா, திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் சுல்பிகா சம்சுதீன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்ததர்கள்.

# தீப்பற்றிய வீட்டிலிருந்து சடலம் மீட்பு

■ க. அகரன்

வவுனியா, தேக்கவத்தை பகுதியில் நேற்று (21) அதிகாலை தீப்பற்றி எரிந்த வீட்டுக்குள் இருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

குறித்த வீடு தீப்பற்றி எரிவதைக் கண்ட அயலவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் விரைந்த, மாநகர சபை தீயணைப்பு பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர்.

இதையடுத்து வீட்டுக்குள் சென்ற போது, குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில், வவுனியா பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து, மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

சர்வதேச அபாகஸ் போட்டி:

# 44 மாணவர்கள் இந்தியா பயணம்

■ ஏ.எம் அஸ்லம்

சர்வதேச அபாகஸ் போட்டியில் பங்குபற்ற, இலங்கையில் இருந்து 44 மாணவர்கள் புதன்கிழமை (21) இந்தியா பயணமானார்கள். சென்னையில் ஞாயிற்றுக்கிழமை (25) சர்வதேச அபாகஸ் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

ஐகேம் அபாகஸ் ( ICAM Abacus) நிறுவனத்தின் ஏழாவது தேசிய அபாகஸ் போட்டியில் சித்தியடைந்த மாணவர்களில் 44 பேரே இவ்வாறு சென்றுள்ளனர். இவர்களில் சாய்ந்தமருது தாறுல் இல்மு கல்வி நிலைய மாணவர்கள் நான்கு பேர் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.



# யுனெஸ்கோ ஆய்வு செய்யவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்

வடக்கு, கிழக்கில் யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர், ஆட்சிப்பீடமேறிய அரசாங்கங்கள், சிறுபான்மையினர் பெருபான்மையான வாழும் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கைகளையே முன்னெடுத்தனர். இன்னும் முன்னெடுத்துக்கொண்டு வருகின்றனர்.

அரசாங்கங்களின் பேரினவாத செயற்பாடுகள், அப்பிரதேசங்களில் வாழும் சிறுபான்மையினரை கடும் விரக்திக்கு உள்ளாக்கச் செய்துள்ளது. தனியார், அரச காணிகளை அடாத்தாக கைப்பற்றுதல், சன செறிவை குறைக்கும் வகையில், குடியேற்றங்கள் அமைத்தல், படையினர் கைவசம் வைத்திருக்கும் காணிகளை விடுவிக்காது ஆக்கிரமித்துக்கொள்ளல் இவ்வாறு கூறிக்கொண்டே போகலாம்.

காலத்துக்கு காலம் புதுப்புதுத் திட்டங்களைத் தீட்டுகின்ற அரசாங்கங்களும் அதிகாரிகளும், சிறுபான்மையினரின் செறிவைக் குறைக்கும் திட்டங்களையே வகுத்துவருகின்றன. இது இனங்களுக்கு இடையில் இடைவெளியை இன்னும் தூரப்படுத்தும் என்பதை எவரும் கவனிப்பதில்லை.

மிகச் சிறந்த உதாரணமாக, குருந்தூர் மலை விவகாரத்தை குறிப்பிடலாம். நீதிமன்ற தடையுத்தரவு பிறப்பித்திருக்கின்ற நிலையில், பௌத்த விகாரை நிர்மாணிக்கப்பட்டது. ஆனால், வவுனியா வெடுக்குநாறி மலை விவகாரத்தில் நீதிமன்ற உத்தரவு அச்சொட்டாக கடைப்பிடிக்கப்பட்டு, அங்கு சென்றிருந்தவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையே, வடக்கு, கிழக்கு மாகாண தொல்பொருள் மரபுரிமை அறிக்கைகள், சிங்கள பேரினவாதத்தால் தயாரிக்கப்பட்டன. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என பாராளுமன்றத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பியான செல்வராசா கஜேந்திரன், வடக்கு, கிழக்கு தொல்பொருள் மரபுரிமைகளை யுனெஸ்கோ ஆய்வு செய்யவேண்டுமென வலியுறுத்தினார்.

தொல்பொருள் மரபுரிமை தொடர்பிலான அறிக்கையொன்றை தயாரிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் எவருமே உள்ளடக்கப்படவில்லை. அதன்பின்னர் கொடுக்கப்பட்ட அழுத்தங்களால் இருவர் நியமிக்கப்பட்டனர். எனினும், பெரும்பான்மை பிரதிநிதிகளின் கையே ஓங்கிநிற்கும் என்பது உண்மையே.

மரபுரிமை இடங்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் தொல்பொருள் ஆராய்ச்சி எனும் பெயரில் பௌத்த விகாரைகள் கட்டப்படுவது மட்டுமே அரங்கேற்றப்படுகின்றது. வடக்கில், தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தமைக்கான அடையாளங்கள் உள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் கூட அவ்வாறான விகாரைகள் பாதுகாக்கப்பட்டன.

பல்லின சமூகம் வாழும் நாட்டில் தமிழ், முஸ்லிம்களின் தனித்துவமான அடையாளங்கள் அழிக்கப்பட்டு சிங்கள-பௌத்தம் மட்டும் என்ற சிந்தனை மேலோங்கி நிற்கின்றது. அதனால்தான், தமிழ் பௌத்த வரலாற்றை ஜனாதிபதி எடுத்துரைத்த போது, சிங்கள பேரினவாதிகள் கொக்கரிக்கத் தொடங்கினர். வரலாற்றை மாற்ற முடியாதென அழுத்தங்களை பிரயோகித்தனர்.

இனங்களுக்கு இடையில் சுமூகமான நிலைமையுடன், ஒருவருக்கு ஒருவர் புரிந்துகொண்டு வாழவேண்டுமாயின், சிறுபான்மை இனங்களுக்குரிய சின்னங்களிலும் மரபுரிமைகளிலும் கைவைக்கக்கூடாது. அதேபோல், அடாத்தாக கைப்பற்றுவதையும் தவிர்க்க வேண்டும். இல்லையேல், சின்னங்கள் இருக்கும்; இனங்களுக்கு இடையில் நல்லிணக்கம் இருக்காது. இனங்களுக்கு இடையில் கசப்புணர்வே விதைக்கப்படும் என்பதை நினைவூட்டுகின்றோம்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தேவை அற்றதை மட்டும் எண்ணும் மாந்தர்கள், எது அவசியமானது எனத் தங்களுக்குள் சிந்திக்க வேண்டும்.

போலிகளில் புரள்வதை விடுத்து, உண்மையின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். கணப்பொழுதும் மெய்யறிவில் இருந்து விலகலாகாது. எவர் எதைச் சொன்னாலும் அது உண்மை என நம்பவும் கூடாது.

உண்மையின் தேடல், எங்களுக்கு அறிவில் ஆரோக்கியத்தை உருவாக்கி விடுகின்றது. ஏன், எதற்கு, எப்படி போன்ற கேள்விகளைக் கேட்காமல், சுயதேடல் இன்றி, முழுமை அடைவது எப்படி?

எல்லோரும் எதைச் சொன்னாலும், தனது அறிவையும் சிந்திக்கத் தூண்டவேண்டும். தன்னை உணருவதும் தன்னை வளர்ப்பதும் பிரதானமான நெறியாகும்.

எதையும் சாதிக்க முடியும் என்பதில், வைராக்கியம் கொள்க! சுயபலம் தன்னைத்தானே வளர்க்கும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

வெற்றியை மனதில் கொண்ட

# உளவியல் நடவடிக்கைகளே யுத்தகள செய்திகள்

(யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (20) இடம்பெற்ற பாராளுமன்ற வரவு செலவு திட்ட அலுவலக சட்டமூலம் மீதான விவாதத்தின் போது ஆற்றிய உரையின் தொகுப்பு)

இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் உலகம் எதிர்நோக்கும் மாபெரும் வரலாற்று நெருக்கடியாகக் கருதப்படுகின்ற உக்ரைன் மீதான யுத்தம், இன்றுவரையான பதினாறு மாதங்களில், பேரழிவுகளையும் பெருமளவிலான உயிர் உடைமை இழப்புகளையும் ஏற்படுத்தியுள்ள சமநேரத்தில், அனைத்து உலக நாடுகளினதும் அரசியல், பொருளாதார கட்டமைப்புகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி, உலக ஒழுங்கையே ஆட்டம் காணச் செய்துள்ளது.

கடந்த மூன்று தசாப்தங்களாக இலங்கையில் நிகழ்ந்தேறிய உள்நாட்டுப் போரால், சர்வதேச வரலாற்றில் எங்கும் பார்த்திருக்கவோ, பதிந்திருக்கவோ முடியாத ஆகப்பெரும் அவலங்களை எதிர்கொண்ட ஓர் இனமான தமிழர்களாகிய நாம், உக்ரைன் மக்களுக்காக பரிதாபப்படுகிறோம்.

சொந்த நாட்டிற்குள்ளேயே இடம்பெயர்தலும், நாடற்ற மனிதர்களாக ஏதிலிகளாக்கப்படுவதும் எத்தனை கொடியது என்பதை, அனுபவ ரீதியாகக் கண்டுகொண்ட நாம், மனிதப் பேரவலமொன்றில், ஏதிலிகளாக அந்தரிக்கும் உக்ரைனியர்களுக்கும் அதேநிலை தொடரக் கூடாது என்பதை உணரத்தலைப்பட்டு இருக்கிறோம்.

உக்ரைன் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பு யுத்தம் பற்றிய பொதுமைப்பாடான பேச்சுகள் எழுகின்ற போதெல்லாம், ரஷ்யாவின் பக்கம் நியாயமிருக்கின்றது என்று ஒருசாராரும், உக்ரைனின் பக்கம் நியாயம் இருக்கின்றது என்று ஒருசாராரும், தத்தமது கருத்தியல்களைத் தெரிவிப்பதற்கான பேசுபொருளாகத்தான் இந்த யுத்தத்தைக் கருதுகின்றனர். ஆனால், ஒரு கொடிய யுத்தத்துக்குள் நின்று, அந்த யுத்தக் கொடுமைகளின் அத்தனை பக்கங்களையும் அணுவணுவாக அனுபவித்தவன் என்கின்ற வகையில், இந்தப் போரையும் அதன் விளைவுகளையும் இலகுவானதாகக் கருதமுடியவில்லை.

ஈழத்தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட இன அழிப்புப் போரின்போது, உக்ரைன் இலங்கை அரசுக்கு தனது பரிபூரண ஆதரவை வழங்கியிருந்தது. குறிப்பாக 61 மாணவிகளின் உயிரைக் குடித்த, ‘செஞ்சோலைப் படுகொலை’ உள்ளிட்ட பல விமானத் தாக்குதல்களின் போது, அத்தகையை குண்டுவீசும் விமானங்களை உக்ரைனியர்களே செலுத்தியிருந்தனர். இறுதிப்போரின் இறுதி நாள்களில், பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இடங்களை நோக்கி, தமது உயிரைக் காக்கும் ஒரே எண்ணத்தோடு எமது மக்கள் திரண்டிருந்தபோது, அவ்விடங்களில் நடத்தப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதல்களிலும் உக்ரைனியர்களில் நேரடிப் பங்கிருந்தது. ஆனால், இவற்றையெல்லாம் தாண்டி, உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு யுத்தத்தின் காட்சிகளை பார்க்கின்றபோது, உக்ரைனில் வீசக்கூடியதான இரத்த வாடையை இங்கிருந்தபடியே நுகர்ந்து உணர முடிகின்றது. அந்தக் குண்டுச் சத்தங்களின் நடுவே பல ஆயிரம் குழந்தைகளின், பெண்களின், முதியவர்களின் அலறல்களையும், கைகளை இழந்த, கால்களை இழந்த, பிய்க்கப்பட்ட சதைகளின் காட்சியையும் மனக்கண்களால் காணமுடிகின்றது.

இலட்சக்கணக்கில் எங்கள் உறவுகள் துடிக்கத்துடிக்க மரணித்ததை, அவயவங்களை இழந்து மனிதப் பிண்டமாகக் கிடந்ததை, நேரில் பார்த்த எங்களுக்கு ஒரு யுத்தத்தின் கொடுமை நன்றாகத் தெரியும். இந்த உயர்ந்த சபையில் இருக்கின்ற பலருக்கும் எனக்கு நேர்ந்த அனுபவம் நேர்ந்திருக்கலாம். தென்னிலங்கை உறவுகள் கூட யுத்தத்தின் கொடுமைகளை பல சந்தர்ப்பங்களில் அனுபவித்திருக்கலாம். அதனால்தான் யுத்தம் என்பது எங்கு நடந்தாலும், யார் யாருக்கு இடையே நடந்தாலும், அந்த யுத்தத்தையும் அது விளைவிக்கும் மனிதப் பேரவலங்களையும் உணரத் தலைப்படுங்கள் என்று இந்த உயரிய சபையைக் கேட்டு நிற்கின்றேன்.

அந்த யுத்தத்தின் சொல்லப்படாத பக்கங்களை, காட்டப்படாத கொடுமைகளை கொஞ்சமேனும் உணர்ந்து பாருங்கள். மற்றொரு யுத்தம் இந்த நாட்டில் நடைபெற வேண்டும் என்று, பல அன்னிய சக்திகள் தமது சுயலாபம் கருதிய சதித்திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கின்ற இந்தத் தருணத்தில், இலங்கையில் வாழும் ஒவ்வொரு குடிமகனும், அது தமிழராக இருந்தாலும் சரி, சிங்களவராக இருந்தாலும் சரி, முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, ஒரு யுத்தத்தின் கொடுமையை, ஒரு யுத்தம் மானிடப்பிறப்புக்கு விளைவிக்கும் அநீதியை நாம் உணர்ந்து பார்க்கவேண்டும்.

2008ஆம் ஆண்டு கிளிநொச்சியில் கடுமையான சண்டைகள் நடைபெற்றபோது, கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அக்காலப் பகுதியில் எறிகணைத் தாக்குதல்களாலும், விமானக் குண்டுவீச்சுகளாலும் கொத்துக்கொத்தாக எமது மக்களும், மாணவர்களும் கொன்றழிக்கப்பட்டதை கண்கூடாகக் கண்டிருக்கிறேன். ஆனால் அந்தச் சம்பவங்கள் இலங்கையின் ஊடகங்களில் வேறு விதமாகவும், பிழையான தரவுகளாகவுமே வெளிவந்திருந்தன. யுத்தகளத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கின்ற எந்தச் செய்தியுமே முழுமையான உண்மையை வெளிப்படுத்துவது கிடையாது. அதுபோலவே ரஷ்ய-உக்ரைன் களமுனைகளில் இருந்து வரும் செய்திகளும் உயிர், உடைமை இழப்பு புள்ளிவிவரங்களும் முற்றிலும் உண்மை என்றில்லை. யுத்தத்தின் வெற்றியை மனதில் கொண்டு வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்ற, உளவியல் நடவடிக்கைளின் திட்டமிட்ட பரப்புரைகளாகவே அனேகமான செய்திகள் அமைகின்றன. ஒரு யுத்தத்தை அனுபவித்த நாடு என்கின்ற ரீதியில், உக்ரைன் யுத்தத்தின் விளைவுகள் பற்றித்தான் நாம் யோசித்தாக வேண்டும். அந்த யுத்தத்தை நடத்துவதற்கு என்னவிலையைக் கொடுக்கவும் பலரும் காத்துக் கொண்டிருக்கின்ற இந்தத் தருணத்தில், அந்த யுத்தத்தை நிறுத்துவதற்கு குறைந்தது எமது கண்ணீரையாவது நாம் கொடுக்க முன்வரவேண்டும்.

ஒரு கொடிய யுத்தத்தில் பெற்றோரை இழந்த ஒரு பிள்ளையின் வலி என்ன என்பது எனக்குத் தெரியும். முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்ட ஒரு இளைஞனின் வாழ்க்கை எத்தனை கொடூரமானதாக இருக்கும் என்று, இப்பொழுதும் நேரடியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். யுத்தத்தின் கொடுமைகளுக்குள் அகப்பட்டு உளவியல் பாதிப்புக்கு உள்ளான ஆயிரக்கணக்கான மனிதர்கள் நடைபிணங்களாக நடமாடித்திரிகின்ற ஒரு பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றவன் என்கின்ற உணர்வு நிலைகளின் அகவயப்பட்டே இங்கு உரையாற்றுகிறேன். தயவு செய்து உலகில் எங்கு யுத்தம் நடந்தாலும் அந்த யுத்தத்தைத் தடுத்து நிறுத்த எங்களால் முடியுமா என்று யோசித்துப் பார்ப்போம். இலங்கை சிறிய நாடுதான். அவ்வாறிருக்க வல்லரசுகளின் விளையாட்டைத் தடுக்க ஏதாவது செய்யலாமா என்று யோசிப்பதே பலருக்கு நகைச்சுவையாக இருக்கலாம். ஆனால், போர் தந்த விளைவுகளின் துயர்சுமந்திருக்கும் ஈழத்தமிழர்களின் காயங்களுக்கு ஒத்தடம் கொடுக்கும் வகையில், கனடிய பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை போல, கனடியப் பிரதமரின் அறிக்கையைப் போல, உக்ரைனின் சமாதானத்துக்காக, உக்ரைனியர்களின் நலவாழ்வுக்காக இந்த மன்றம் குறைந்தது ஒரு பிரேரணையையாவது நிறைவேற்றலாம். அங்கு காவுகொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் உயிர்களுக்காக சில நிமிட மௌன அஞ்சலியையாவது நாம் செலுத்தலாம்.

அதையும் தாண்டி இனி ஒரு யுத்தம் இந்த மண்ணில் நடக்கவே கூடாது என்ற ஒரு பிரகடனத்தைக்கூட நாங்கள் எடுக்க முடியும். உக்ரைன் மீது யுத்தத்தை மேற்கொண்டுள்ள ரஷ்யா, தான் அணுவாயுதங்களைப் பாவிக்கப் போவதாக கிட்டத்தட்ட எட்டுத் தடவைகளுக்கு மேல் எச்சரித்துவிட்டது. தனது அணுவாயுதங்கள் சிலவற்றை அது பெலாரசுக்கு நகர்த்தியும் வைத்துள்ளது. பிரித்தானியா மீது அவற்றைப் பாவித்து பிரித்தானியாவை அழித்துவிடப்போவதாகவும் எச்சரித்து வருகின்றது. ஒரே குண்டில் பிரித்தானியாவை அழித்துவிடப் போவதாக ரஷ்ய அதிபர் புட்டின் தன்னிடம் நேரடியாகவே எச்சரித்ததாக, பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் கூறியிருந்தார்.

நாங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஓர் உலக யுத்தத்தை சந்தித்தேயாக வேண்டிய ஆபத்தை நோக்கி, உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு யுத்தம் எங்களை இட்டுச் சென்றுகொண்டு இருக்கின்றது. இந்தப் பூமியில் இன்றைக்கு சுமார் 13,100 அணுகுண்டுகள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இந்தப் பூமிப்பந்தை பல தடவைகள் அழித்துவிடும் அளவுக்கு அணுவாயுதங்கள் நிறைந்துள்ள இன்றைய நிலையில், ஓர் அணுவாயுத யுத்தத்தை நோக்கி உலகம் மிக வேகமாக நகர்ந்துகொண்டிருக்கின்றது.

இடதுசாரிக் கொள்கையை உலகநாடுகளுக்கே கற்றுக்கொடுத்து, ஒடுக்குமுறைக்கு எதிராகவும் மக்களிடையே இன, மொழி, மத அடிப்படையிலான சமத்துவத்தைப் பேணுவதிலும் சோவியத் ஒன்றியமாக இருந்து ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமான சாம்ராஜ்யமாக நடந்துகொண்ட ரஷ்யா, இறைமையோடு வாழ நினைக்கும் உக்ரைனியர்கள் மீது மேற்கொண்டுள்ள இவ் ஆக்கிரமிப்புப் போரின் விளைவுகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய அழிவுகளும், இழப்புகளும் முடிவற்றுத் தொடர்வது மனிதாபிமானத்துக்கும் சர்வதேச நியமங்களுக்கும் அப்பாற்பட்ட செயல் என்ற அடிப்படையில், ரஷ்யாவால் உக்ரைன் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள ஆக்கிரமிப்புப் போருக்கு எதிரான கண்டனத் தீர்மானமொன்றை இந்த உயரிய சபையில் நிறைவேற்றுவதன் மூலம், ஒரு நாடாக, யுத்தத்தின் வடுக்களைச் சுமந்து கொண்டிருக்கின்ற ஒரு தேசமாக, உலக சமாதானத்துக்கான அடிப்படையை ஏற்படுத்துவதில் ஒவ்வொரு நாடுகளுக்கும் இருக்கும் வகிபங்கை உறுதிப்படுத்துமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

## கடிதங்கள்

காட்டு யானைகளின்

### அட்டகாசத்துக்கு முடிவுகட்டுமாறு கோரிக்கை

திருக்கோவில், மண்டானை, சாகாமம், குடிநிலம் ஆகிய வயல் வெளிகளுக்கு அண்மையில் உள்ள சுனாமி மீள்குடியேற்றக் கிராமங்களில், தொடர்ச்சியாக காட்டு யானைகளின் அட்டகாசம், கடந்த மூன்று வாரங்களாக இருந்துவருவதுடன், மக்கள் குடியிருக்கும் வீடுகள், வாழ்வாதார பயிர்கள் என்பவற்றை துவசம் செய்து வருவதாக, மேற்குறித்த கிராமங்களின் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

காட்டு யானைகள், கிராமத்துக்குள் படையெடுத்து வீடுகள் மற்றும் வாழ்வாதார பயிர்களை தொடர்ந்து நாசம் செய்து வருவதால், தாம் தொடர்ந்தும் தாங்க முடியாத பொருளாதார பாதிப்புகளை எதிர் கொண்டு வருவதுடன் உயிருக்கும் அச்சுறுத்தலாக இக்காட்டு யானைகள் இருப்பதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, தமது உயிர் மற்றும் வாழ்வாதாரப் பயிர்களை பாதுகாக்கும் வகையில், இடைநடுவில் நிற்கும் யானை வேலியை பூர்த்திசெய்து தருமாறும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை, தம்பிலுவில் கமநல சேவை அலுவலகத்தில் பணிபுரிந்து, அண்மையில் ஓய்வு பெற்ற சிரேஷ்ட விவசாய போதனாசிரியரான 61வயதுடைய கே. கங்காதரன், கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் இரவு வேளையில் வயல் காவலில் இருந்த போது, யானை தாக்குதலுக்கு இலக்காகி மரணித்து இருந்தமை, இப்பிரதேசத்தில் யானைகளின் அட்டகாசத்துக்கு உடனடியாக முடிவுகட்ட வேண்டிய அவசியத்தை உணர்த்தி நிற்கின்றது.

எஸ். கார்த்திகேசு





## அழகானது என்றாலும் சந்தேகத்துக்குரியது

ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தில் ராஜபக்ஷர்களின் ஆட்சிக்கால ஊழல் மோசடிகள் மறக்கப்பட்டுள்ளன. சட்டமூலம் அழகானதாக காணப்பட்டாலும் பல சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது. ஆகவே கடந்த காலத்தை உள்ளக்கியதாக சட்டமூலம் திருத்தம் செய்யப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு



குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது, சுகாதார அமைச்சில் இடம்பெற்ற ஊழல் மோசடியால் நாட்டு மக்களின் சுகாதார பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியுள்ளது. அவசர கொள்வனவு ஊடாக இறக்குமதி செய்யப்பட்ட மயக்க மருந்து தடுப்பூசி காரணமாக மூன்று பேர் உயிரிழந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தருக்கு அப்பாற்பட்ட வகையில் வெளிநபர்களிடமிருந்து அவசர கொள்வனவு ஊடாக இந்தத் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக 3.8 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அவசர மருந்து கொள்வனவை சுகாதார அமைச்சு எப்போது முடிவுக்கு கொண்டு வரும் என்பதை குறிப்பிட முடியவில்லை. ஆகவே இந்தத் தடுப்பூசி கொள்வனவு மற்றும் மூவரின் மரணம் தொடர்பில் சுகாதார அமைச்சு பாராளுமன்றத்துக்கு உண்மையை அறிவிக்க வேண்டும் என்றார்.

## கொரியாவுக்கு நேரடி விமான சேவை



கொரியாவுக்கான நேரடி விமான சேவைகளை எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் ஆரம்பிப்பது தொடர்பில் கொரிய அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) தயாசிறி ஜயசேகர எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

கொரியாவுக்கு வேலை வாய்ப்புக்காக செல்லும் இலங்கையர்கள் பயணிக்கும் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யூ.எல். 470 இலக்க விமானம் 12 மணித்தியாலங்கள் தாமதமாகவே பயணத்தை மேற்கொண்டுள்ளது. இதனால் அந்த விமானப் பயணிகள் பெரும் பாதிப்பை எதிர்கொள்ள நேர்ந்தது. இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையிலேயே நேரடி விமான சேவைகளை முன்னெடுப்பதற்காக கொரிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது என்றார்.

அதேவேளை மேற்படி சிக்கல்களுக்கு தீர்வு காணும் வரை தற்காலிகமாக எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு சிங்கப்பூர் ஊடாக கொரியா சென்றடையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இம்முறை கொரிய வேலை வாய்ப்புக்காக செல்லும் 800 ஆவது குழு நாட்டிலிருந்து புறப்பட்டது. அது தொடர்பில் நாம் கொரிய நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தோம். எனினும் இந்த விமானப் பயணங்களில் ஏற்படும் தாமதம் காரணமாக பெரும் பாதிப்புகளை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது என்றார்.

## பொறுப்பை ஊடகங்களுக்கே வழங்க வேண்டும்

தகவல் மூலங்களைப் பாதுகாக்க ஊடகங்களுக்கு உரிமையுள்ளதால் ஊடக ஒழுங்குபடுத்தும் கொள்கையை தயாரிக்கும் பொறுப்பை ஊடகங்களுக்கே வழங்க வேண்டும். அதில் அரசு தலையிடக்கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) நிலையியல் கட்டளையின் கீழ் கேள்விகளை முன்வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



ஊடக ஒழுங்குபடுத்தல் இருக்க வேண்டும். அதனை அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால், ஊடக ஒழுங்குபடுத்தல் கொள்கை தயாரிக்கும் பொறுப்பை ஊடக துறைக்கே வழங்கவேண்டும். அதில் அரசு தலையிடக்கூடாது. சகல ஊடகங்களுக்கும் ஒரே இடத்தில் தகவல்களை வழங்க தேவையான நடைமுறை கட்டமைக்கப்பட வேண்டும். ஊடகவியலாளர்கள் தகவல்களை தெரிவிக்கும் சுதந்திரம் இருக்க வேண்டும். தகவல் மூலங்களைப் பாதுகாக்க ஊடகங்களுக்கு உரிமையுள்ளது என்றார். இலத்திரனியல் ஒளிபரப்பு நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக சில குறிப்பிட்ட சட்டம் இருக்க வேண்டும் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் விடயம். ஆனால் இதற்கான அரசின் தலையீடு வரையறையுடன் கூடிய நிலையில் மேற்கொள்ளப்படுவதாக அமைய வேண்டும். கட்டுப்பாடு என்ற பெயரில் அரசை விமர்சிக்கும் ஊடகங்களை ஒடுக்குவது இதன் ஊடாக இடம்பெறக்கூடாது என்றார்.

## மோசடி நிதியை அரசுடமையாக்கும் வழிமுறைகள் சட்டத்தில் இல்லை

மோசடி செய்யப்பட்ட அரச நிதி வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ளன; அல்லது வைப்பிலிடப்பட்டுள்ளன. ஆகவே இந்த நிதியை அரசுடமையாக்க உரிய வழிமுறை சட்டமூலத்தில் இல்லை எனத் தெரிவித்த சுயாதீன எம்.பியான ஜி.எல் பீரிஸ், ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன் 3,25,000 பேர் தமது சொத்துகளை பகிரங்கப்படுத்த நேரிடும். இது நடைமுறைக்கு சாத்தியமா எனவும் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (21) இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலம்



இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

இந்தச் சட்டமூலத்தில் அடிப்படை பிரச்சினைக்கான தீர்வு உள்வாங்கப்படவில்லை. மோசடி செய்யப்பட்ட அரச நிதி வெளிநாடுகளில் முதலீடு அல்லது வைப்பிலிடப்பட்டுள்ளன. ஆகவே இந்த நிதியை அரசுடமையாக்க உரிய வழிமுறை சட்டமூலத்தில் இல்லை.

வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள அரச நிதியை மீண்டும் அரசுமடையாக்க சர்வதேச நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தச் சட்டமூலத்தில் தெளிவான சுட்டிக்காட்டல்கள் ஏதும் கிடையாது. இறந்தகாலம் குறித்து கவனம் கொள்ளப்படவில்லை. எதிர்காலத்தை மையப்படுத்தியதாக மட்டுமே சட்டமூலம் உள்ளது என்றார்.



# போதை என்னும் சமூக நச்சுவிதை

ஜெயக்காந்தன் கனிஷ்ரா
kanikanthan427@gmail.com



உடல்களைப்பை நீங்குவதற்கும், பொழுதுபோக்கிற்காகவும் மனிதன் உள்ளெடுத்த உடல் நலனிற்கும் சமூக நலனிற்கும் ஊறு விளைவிக்கக்கூடிய பொருட்களை போதைப்பொருட்கள் என அழைப்பதுண்டு.

இவை சாராயம், கஞ்சா, அபின் என்பவற்றையும் தாண்டி பியர், வைன், ஐஸ், எதனோல், கோக்கைன், நிக்காட்டின் புகையில் போன்ற பல்வேறு வகைகளில் சாதாரண மக்கள் கையாளக்கூடிய இலகுவான முறைகளில் பெறக்கூடியவையாக காணப்படுகின்றன.

உலக அளவில் சுமார் 140 மில்லியன் மதுபிரியர்கள் இருப்பதாக உலக சுகாதார அமைப்பு மதிப்பிட்டுள்ளது. இந்த வகையில் இலங்கை மதுபாவனையில், உலக அரங்கில் 4 ஆவது இடத்தில் காணப்படுகின்றது. நகர்புற குடிசைப்பகுதிகளில் 43% சதவீதமானவர்கள் மதுவுக்கு அடிமையாகிவிட்டனர். பெருந்தோட்டப் பகுதிகளில் இது 55% சதவீதமாக உள்ளது. பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களில் 18% சதவீதம் பேர் மதுவுக்கு அடிமையாக உள்ளனர். இது தவிர இதற்காக அவர்கள் சராசரியாக செலவழிக்கும் பணம் நாளொன்றுக்கு 950 - 1,000 ரூபாய் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் மொத்தக் குற்றச்செயல்களில் 38% சதவீதமானவை மது பாவனையால் ஏற்படுகின்றது. அதாவது, போதையால் ஏற்படுகின்றது. கடந்தாண்டில் நடந்த மொத்த வாகன விபத்தில் இறந்தோர் எண்ணிக்கை 2,800 ஆகும். இதில் 90% சதவீதமானவை மது போதையால் நடந்துள்ளது.

குறிப்பாக, இலங்கையில் மேல்மாகாணம் போதைப்பாவனையில் முதலிடத்தை பெற்றுவிளங்குகின்றது. முதலாவது மாவட்டமாக கொழும்பு காணப்படுகின்றது. அதன் சதவீதம் 71 % ஆகும். இதற்கு அடுத்த படியாக கம்பஹா 22% காணப்படுகின்றது. இங்கே 600,000 மேற்பட்டோர் கஞ்சா பாவனையாளர் உள்ளனர். தவிர நாட்டில் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இவ்வருடத்தின் முதல் அரையாண்டு பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருள் பாவனையாளர்களின் சதவீதமும் அதிகரித்துள்ளது.

> **“ குந்தர்பிராங் தனது தங்கியிருத்தல் கோட்பாட்டில் குறிப்பிடும் போது ‘உலகில் 80% அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை 20% அபிவிருத்தியடைந்த நாடுகள் கட்டுப்படுத்துகின்றன’ என்று முன்வைத்துள்ளார்**

இவை குறிப்பாக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இருந்து அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளை நோக்கி திட்டமிட்டவகையில் மிகவும் மலிவாகவும், கடன் வசதியிலும், நவீன சந்தைப்படுத்தல் உத்திகளான விளம்பரம், தென்னிந்திய திரைப்படங்களின் வாயிலாகவும் பெருப்பித்து காட்டப்படுகின்றன. இதுவே தற்காலத்தில் எமது இளைஞர் சமுதாயத்தில் ஒரு போதை கலாசாரம் என்னும் புதிய நச்சு விதை தோற்றம் பெற்றுள்ளது.

இந்திய திரைப்படங்கள் மூலம் போதைப்பொருள் என்பது பெருப்பித்து காட்டப்படுவதன் காரணமாக, தற்காலத்து தலைமுறையினர் மத்தியில் போதைபொருட்பாவனை என்பது ‘ஒரு கெத்து’ கலாசாரமாக மாற்றம் பெற்றுவிட்டது. தென்னிலங்கையைப் போன்று வடகிழக்கிலும் போதைப் பொருள் பாவனை கூடிக் கொண்டே போகின்றது. அதுவும் இளம் பருவத்தினரே அதிகமாக போதைக்கு அடிமையாகி வருகின்றனர்.

முக்கியமாக பாடசாலை மாணவர்கள் மத்தியில் மாவா, கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது. மற்றோர் அதிர்ச்சி தரும் தகவல் சில பாடசாலை மாணவிகளும் ‘மாவா’ போதை பாவனையில் சிக்கியுள்ளமை தெரியவந்துள்ளது.

தலைநகரிலும் கிராமப்புறங்களிலும் முக்கியமாக பிரசித்தி பெற்ற பாடசாலைகளுக்கு அண்மித்த இடங்களில் மறைமுகமான விதத்தில் மாணவர்களுக்கு போதை விற்பனை செய்யபடுவதாக தெரிவிக்கப்படுகின்றது. நாட்டின் எந்தப்பகுதியை எடுத்துக் கொண்டாலும் நகரம், கிராமம், வீதிக்கு வீதியென சகல இடங்களிலும் போல் இன்று போதைப்பொருட்கள் கிடைக்கக் கூடிய நிலையையே காணமுடிகிறது.

> **“ போதைப்பாவனையின் காரணமாக வீதி விபத்துகள், கொலைகள், தற்கொலைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள், களவு போன்ற சமூகவிரோத செயற்பாடுகள் எம் சமூகத்தில் அதிகரித்துள்ளன**

இலங்கையில் 12 சதவீதமான போதைப்பொருள் பாவனையாளர்கள் ஊசி மூலமே போதையேற்றுவதாக அறிக்கையொன்று தெரிவிக்கின்றது. இவர்கள் குடும்பப்பிரச்சினை, கல்வியில் தோல்வியடைதல், வேலையின்மை, காதல் தோல்வி போன்ற பல காரணங்களுக்காக இந்தப் பழக்கத்திற்கு அடிமையாகுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இவை தொடர்பாக குந்தர்பிராங் தனது தங்கியிருத்தல் கோட்பாட்டில் குறிப்பிடும் போது ‘உலகில் 80% அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை 20% அபிவிருத்தியடைந்த நாடுகள் கட்டுப்படுத்துகின்றன’ என்று முன்வைத்துள்ளார். அதாவது, அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளான இலங்கை, இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளை நோக்கி திட்டமிட்ட வகையில் போதை என்னும் நச்சு விதையை பரப்புவதை இது குறித்துநிற்கின்றது.

இவை எமது சடங்கு, சம்பிரதாயங்களிலும், பழக்கவழக்கங்களிலும் பல்வேறு வகைகளில் ஊடுருவி ஒரு புதிய கலாசார மாற்றத்தினை உருவாக்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக மனிதனின் வாழ்வின் பிறப்பு தொடக்கம் இறப்புவரை, ஒவ்வொரு வாழ்க்கை வட்டச்சடங்குகளிலும் போதைப்பொருள் என்பது ஒருவிதையாக விதைக்கப்படுவதை காணலாம். பிறந்தநாள் கொண்டாட்டங்கள், திருமணநாள் கொண்டாட்டங்கள், மரணச்சடங்குகள் என ஒவ்வொரு சடங்குகளிலும் போதை ஒரு சிறப்பம்சமாக இணைத்துள்ளது.

> **“ உலக அளவில் 140 மில்லியன் மதுபிரியர்கள் இருப்பதாக உலக சுகாதார அமைப்பு மதிப்பிட்டுள்ளது. இலங்கை மதுபாவனையில், உலக அரங்கில் 4 ஆவது இடத்தில் காணப்படுகின்றது**

இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை, உல்லாசப் பயணிகளின் வருகை போன்ற காரணிகளால் நவீன போதைப் பொருட்கள் நாட்டினுள் பிரவேசிக்க ஆரம்பித்துள்ளன. இவ்வாறான செயற்பாடுகளின் காரணமாக சமூகத்தின் அடிப்படை அலகாகிய குடும்பங்கள் சீரழிந்து, விவாகரத்துவரை செல்கின்றது.

போதைப்பாவனையின் காரணமாக வீதி விபத்துகள், கொலைகள், தற்கொலைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள், களவு போன்ற சமூகவிரோத செயற்பாடுகள் எம் சமூகத்தில் அதிகரித்துள்ளன.

இவ்வாறான சூழலில் இதனை குறைப்பதற்கான பரிந்துரைகளாக நாட்டின் தலைமைத்துவ பதவிகளை வகிப்போர், இளைஞர்களை போதையில் இருந்து மீட்டெடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, தமது பொறுப்புகளையும் கடமைகளையும் சரிவர நிறைவேற்றுதல் வேண்டும்.

எம்முடைய நாட்டினை நோக்கி இவ்வாறு திட்டமிடப்பட்ட ரீதியில் போதைப்பொருட்கள் பரப்பப்படுகின்றன என்ற விழிப்புணர்வை இளையோர் மத்தியில் விதைத்தல் வேண்டும். பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருட்கள் பற்றிய சரியான விழிப்புணர்வை, வாழ்க்கைத்தேர்ச்சியும் குடியுரிமை கல்வியும் என்ற பாடத்தித்தின் கீழ் கொண்டுவர வேண்டும்.

பாரம்பரிய சடங்குகளின் பொறுமதிகளை உணர்ந்து, அவற்றிற்கான முக்கியத்துவத்தை உணர்ந்து, அதன்படி செயற்படுதல் வேண்டும். மதுபாவனை சாலைகளுக்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திங்களை குறைத்தல் வேண்டும். போதைப்பொருட்பாவனையால் ஏற்படும் பாதக விளைவுகளை மக்கள் உணரும் வகையில் திரைப்படகாட்சிகளை முன்வைத்தல் வேண்டும். போதைப்பொருள் பாவனை தொடர்பான மெருகூட்டப்பட்ட காட்சிகளை தணிக்கை செய்தல் வேண்டும்.

ஒருதலை முறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு போதை பாவனை கலாசாரம் கடத்தப்படுவதை நிறுத்த வேண்டும் என்றால் இந்த தலைமுறையில் காணப்படும் இளையோர் அதனை குறைத்தால் மட்டுமே பரம்பரை இடைவெளிகளின் ஊடாக அதனை குறைக்க முடியும் என்பதை உணர்ந்து செயற்படுதல் வேண்டும்.

எமது கழுத்து மட்டும் காணப்படும் போதை என்னும் சுருக்கு கயிறு எம்மை பலியெடுக்க விடாது, நாம் சமயோசிதத்துடன் செயற்பட்டால் மாத்திரமே போதை என்னும் நச்சு விதை எம் சமூகத்தில் வேரூன்றி வளரவிடாது, அதை வேரோடு பிடிங்கிவிடமுடியும் என்று தெளிந்த சிந்தனையுடன் செயற்படுவோம்.

டெகுசிகல்பா

பெண் கைதிகளுக்கு இடையில் மோதல்

# 42 பேர் மரணம்



மத்திய அமெரிக்கா நாடான ஹோண்டுராஸ் தலைநகர் டெகுசிகல்பா அருகே உள்ள தமரா பகுதியில் பெண்கள் சிறைச்சாலை உள்ளது. இங்கு ஏராளமான பெண் கைதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர்.

இந்த நிலையில் சிறையில் பெண் கைதிகள் இடையே திடீரென்று மோதல் ஏற்பட்டது. இரண்டு குழுக்களாக பிரிந்து கைதிகள் மோதிக் கொண்டதில் கலவரம் வெடித்தது. சிறைக்குள் துப்பாக்கிகளால் சுட்டுக் கொண்டனர். மேலும் பலர் மீது தீ வைத்து எரித்தனர்.

கலவரத்தை கட்டுப்படுத்த அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுத்தனர். ஆனால் கைதிகள் ஆவேசத்துடன் மோதிக் கொண்டதால் உடனடியாக கட்டுக்குள் வரவில்லை. நீண்ட போராட்டத்துக்கு பிறகு கலவரத்தை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த கலவரத்தில் பெண் கைதிகள் 42 பேர் மரணமடைந்துள்ளனர். இன்னும் சிலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

போபால்




# அடிவார முகாம் வரை ஏறினார் 5 வயது சிறுமி

எவரெஸ்டின் அடிவார முகாம்தானே என்று சாதாரணமாக எண்ணிவிட வேண்டாம். இது கடல் மட்டத்தில் இருந்து 17 ஆயிரத்து 598 அடி உயரத்தில் இருக்கிறது.

பயிற்சி பெற்ற மலையேற்ற வீரர்களே இதை எட்டுவதற்கு ஏக சிரமப்படுவார்கள். ஆனால் 5 வயதே ஆகும் பிரிஷா, இந்த உயரத்தை தொட்டு, பிரமிப்பூட்டி இருக்கிறார்.

பிரிஷாவின் பூர்வீகம் மத்தியபிரதேச மாநிலம் பேதுல் மாவட்டம் என்றாலும், மகாராஷ்டிர மாநிலம் தானேயில் தனது பெற்றோர், 2 சகோதரிகளுடன் வசிக்கிறார்.

மும்பையில் ஐ.டி. என்ஜினீயராக பணிபுரியும் லோகேஷ், ஒரு மலையேற்ற வீரரும்கூட. அப்பா வழியில் மகள் பிரிஷாவுக்கும் மலையேற்றத்தில் ஆர்வம் பிறந்திருக்கிறது.

சென்னை

# பக்ரீத் பண்டிகைக்காக 70 ஆயிரம் ஆடுகள்

தமிழகம் முழுவதும் எதிர்வரும் 29ஆம் திகதி பக்ரீத் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி அனைத்து மாவட்டங்களிலும் இறைச்சிக்காக ஆடுகள் வியாபாரம் சூடு பிடிக்க தொடங்கியுள்ளது. அந்தந்த பகுதிகளில் உள்ள சந்தைகளில் ஆடுகள் விற்பனை களைகட்டி இருக்கிறது. ரம்ழான் பண்டிகையையொட்டி சென்னையிலும் ஆயிரக்கணக்கான



ஆடுகள் ஆண்டுதோறும் வெட்டப்படுவது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டு ரம்ழான் பண்டிகைக்கு 50 ஆயிரத்தில் இருந்து 70 ஆயிரம் ஆடுகள் வரை விற்பனைக்காக வரவழைக்கப்படுகிறது.

சென்னை

# இந்தியா வருகிறார் எலான் மஸ்க்

தாம் இந்திய பிரதமர் மோடியின் மிக பெரிய ரசிகன் என உலக கோடீஸ்வரரான எலான் மஸ்க் தெரிவித்துள்ளார். நியூயோர்க்கில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த பிறகு இந்திய ஊடகங்களுக்கு பேட்டியளித்த எலான் மஸ்க், தாம் அடுத்த ஆண்டு இந்தியா வர இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்தியா மீது மிகுந்த



அக்கறை காட்டும் பிரதமர் மோடி, இந்தியாவில் கணிசமான முதலீடுகளை செய்ய தூண்டுவதாக தெரிவித்துள்ளார்.

ஜோலார்பேட்டை



# இறந்தவரின் ஆவியை வீட்டுக்கு அழைத்து வர சிறப்பு பூஜைகள்

திருப்பத்தூர் மாவட்டம், சொரக்காயல் நத்தம் கிராமத்தில் விபத்தொன்றில் இறந்துபோன 20 வயதான இளைஞனின் ஆவியை வீட்டுக்கு அழைத்துவர சிறப்பு பூஜைகள் இடம்பெற்றன.

படித்து முடித்துவிட்டு, வேலைக்காக காத்திருந்த அந்த இளைஞன், மோட்டார் சைக்கிளில் சென்றபோது, எதிரே வந்த லொறியுடன் மோதி மரணமடைந்தார்.

அவரது உடலை உறவினர்கள் அப்பகுதியில் உள்ள சுடுகாட்டில் அடக்கம் செய்தனர்.

இறந்து போனவரின் ஆவியை ஏரிக்கரையில் இருந்து, வீட்டுக்கு அழைத்துவர குடும்பத்தினர் முடிவு செய்தனர். அவரது ஆவியை வீட்டுக்கு அழைத்து வர ஏரிக்கரையில் சிறப்பு பூஜை செய்தனர். அங்கு பூங்கரகம் வைத்து, தரையில் மஞ்சள்-குங்குமம் மற்றும் மலர்கள் தூவி பம்பை மேளங்கள் முழங்க சிறப்பு பூஜை நடந்தது. ஏரிக்கரையில் இருந்து பூங்கரகத்தை ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திற்கு மஞ்சள் நீர் தெளித்தப்படியும், பூக்கள் தூவியப்படி சென்றனர்.

அவரது உருவப்பட்டத்திற்கு மாலை அணிவித்து வீட்டிலும் பம்பை மேளம் முழங்க பூஜைகள் நடத்தப்பட்டது. இறந்த மகனின் ஆவி தன்னுடன் வாழ வேண்டும் என்று நம்பிக்கையில் பெற்றோர்கள் நடத்திய இந்த பூஜை அந்த கிராம மக்களிடத்தில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இதுகுறித்து அந்த கிராம மக்கள் கூறியதாவது: இறந்துபோனவரின் ஆவி வீட்டுக்கு வர வழி இல்லாமல் சுற்றித்திரியும். உறவினர்கள் காண முடியாமல் துடிக்கும். இதனை கருத்தில் கொண்டு, இறந்தவர் ஆவி வீட்டிற்கு அழைத்து வந்தால், அவரது ஆன்மா சாந்தியடையும் என்பது நம்பிக்கையாகும் என்றனர்.

கோவை

# திருமணமான பெண்ணை, பெண் கேட்டவருக்கு வெட்டு

கோவையில் திருமணமான பெண்ணை, பெண் கேட்டு சென்ற இளைஞருக்கு தலையில் அரிவாள் வெட்டு விழுந்துள்ளது. திருமணத்தை தாண்டிய தகாத உறவால், புகுந்த வீட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்டிருக்கிறார் 30 வயது பெண். மகளின் இந்த நிலையை நினைத்து அப்பெண்ணின் தாய் வருந்தி கொண்டிருந்தார்.

சுப நிகழ்ச்சிகளுக்கு மேடை அலங்காரம் செய்து கொடுக்கும் வேலைச்செய்யும் ஒருவர் 2017 ஆம் ஆண்டு, காதணி விழா ஒன்றிற்கு மேடை அலங்காரம் செய்து கொடுக்க சென்றுள்ளார். அந்த விழாவை முன்னின்று நடத்திய திருமணமான 30 வயது பெண்ணுடன் அவருக்கு பழக்கம் ஏற்பட்டுள்ளது.

இருவரும் அலைபேசியில் அடிக்கடி பேசி வந்ததால்,காதல் ஏற்பட்டு தகாத உறவாக மாறியுள்ளது. திருமணமான அந்த பெண்ணுக்கு 11 வயதில் மகள் உள்ளது. பெண்ணின் தகாத உறவு அவரின் கணவருக்கு தெரியவர, அவர் மனைவியை கண்டித்துள்ளார். இதனால், அப்பெண், காதலனுடன் பேசுவதை நிறுத்திவிட்டார்.

மேடை அலங்காரம் செய்பவருக்கு 2020 ஆம் ஆண்டு வேறொரு பெண்ணுடன் திருமணம் நடந்துள்ளது. திருமணத்துக்கு பிறகும் அந்த 30 வயது திருமணமான பெண்ணை மீண்டும் தொடர்பு கொண்டு பேச ஆரம்பித்தார்.

இருவரும் தங்களின், கணவனுக்கும், மனைவிக்கும் தெரியாமல் உறவை வளர்த்து வந்தனர். இந்த உறவு இருவரது வீட்டிற்கும் ஒரு கட்டத்தில் தெரியவந்துள்ளது.

இதனால், ஆத்திரமடைந்த அவரது மனைவி, அவரின் தந்தை வீட்டுக்கு கோப்பித்துக்கொண்டு சென்றுவிட்டார். திருமணமான அந்த 30 வயது பெண்ணும் தனது கணவனுடன் சண்டையிட்டு தாய் வீட்டில் தஞ்சமடைந்திருக்கிறார்.

இந்நிலையில், தனது தாய் மற்றும் தந்தையிடம், தன்னுடைய தகாத உறவை எடுத்துக்கூறிய அந்த 30 வயது பெண், தன்னை அவருக்கு திருமணம் செய்து வைக்குமாறு கூறியிருக்கிறார்.

இதை கேட்டு அதிர்ச்சியடைந்த இருவரும், மகளுக்கு புத்திமதி கூறி கணவருடன் சேர்ந்து வாழ வற்புறுத்தியிருக்கின்றனர். இதனால் விரக்தி அடைந்த பெண், மேடை அலங்காரம் செய்பவரை தொடர்பு கொண்டு, தனது பெற்றோரிடம் தன்னை பெண் கேட்குமாறு கூறி அலைபேசியில் அழைப்பு விடுத்திருக்கிறார்.

தனது இரு நண்பர்களை அழைத்துக்கொண்டு, 30 வயது பெண்ணின் வீட்டிற்கு சென்று பெண் கேட்டிருக்கிறார். அப்போது, காய்கறி நறுக்கி கொண்டிருந்த அந்த பெண்ணின் தாய், பெண் கேட்டு வந்தவரின் தலையில் வெட்டியுள்ளார். காயமடைந்த நபர், நண்பர்களுடன் ஓடிவிட்டார். விபரத்தை கேள்வியுற்ற பொலிஸார், அப்பெண்ணின் தந்தை, தாய் இருவரையும் கைது செய்துள்ளனர்.

முதலாவது ஆஷஸ் டெஸ்டில்

# இங்கிலாந்தை வென்ற அவுஸ்திரேலியா

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஆஷஸ் டெஸ்டில் அவுஸ்திரேலியா வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், பேர்மிங்ஹாமில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினமிரவு முடிவுக்கு வந்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, ஜோ றூட்டின் ஆட்டமிழக்காத 118, ஜொனி பெயார்ஸ்டோவின் 78, ஸக் குறொலியின் 61 ஓட்டங்களோடு தமது முதலாவது இனிங்ஸில் 8 விக்கெட்டுகளை இழந்து 393 ஓட்டங்களைப் பெற்றபோது தமது இனிங்ஸை இடைநிறுத்தியது. பந்துவீச்சில், நேதன் லையன் 4, ஜொஷ் ஹேசில்வூட் 2, கமறொன் கிறீன் மற்றும் ஸ்கொட் போலண்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.



பதிலுக்குத் தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, உஸ்மான் கவாஜாவின் 141, அலெக்ஸ் காரியின் 66, ட்றெவிஸ் ஹெட்டின் 50, அணித்தலைவர் பற் கமின்ஸின் 38, கமறொன் கிறீனின் 38 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 386 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஒலி றொபின்ஸன், ஸ்டுவர்ட் ப்ரோட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், மொயின் அலி 2 மற்றும் ஜேம்ஸ் அன்டர்சன், அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 273 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், றூட் 46, ஹரி ப்றூக் 46, ஸ்டோக்ஸ் 43, றொபின்ஸன் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், லையன், கமின்ஸ் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளையும், ஜொஷ் ஹேசில்வூட் மற்றும் ஸ்கொட் போலண்ட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அந்தவகையில் 281 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, கவாஜாவின் 65, கமின்ஸின் ஆட்டமிழக்காத 44, லையனின் ஆட்டமிழக்காத 16 ஓட்டங்களோடு 8 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக கவாஜா தெரிவானார்.



# மாகாணத்துக்குத் தெரிவான விபுலானந்தா

வி.ரி.சகாதேவராஜா

கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளுக்கு காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரி தெரிவாகியுள்ளது.

கல்முனை வலய மட்ட 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் இரண்டாமிடத்தைப் பெற்றதைத் தொடர்ந்தே மாகாண மட்டப் போட்டிகளுக்கு விபுலானந்தா தெரிவாகியுள்ளது.

சிநேகபூர்வப் போட்டிகளில்

# பிரேஸிலை வீழ்த்திய செனகல்

## ஜேர்மனியை வென்ற கொலம்பியா

சிநேகபூர்வப் போட்டிகளில், போர்த்துக்கல்லில் நேற்று அதிகாலை நடைபெற்ற பிரேஸிலுடனான போட்டியில் 4-2 என்ற கோல் கணக்கில் செனகல் வென்றது.

செனகல் சார்பாக சாடியோ மனே இரண்டு கோல்களையும், ஹபிப் டியல்லோ ஒரு கோலையும் பெற்றதோடு, மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது. பிரேஸில் சார்பாக, லூகாஸ் பக்குவெட்டா, மார்குய்ன்ஹாஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை ஜேர்மனியில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-0 என்ற கோல் கணக்கில் கொலம்பியா வென்றது. கொலம்பியா சார்பாக, லூயிஸ் டயஸ், ஜூவான் குவாராடோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



# இலங்கைக் குழாமில் மதுஷங்க, டுனித்

இலங்கைக் குழாமில் டில்ஷான் மதுஷங்க, டுனித் வெல்லலாகே, சஹான் ஆராச்சிகே ஆகியோர் நாளை இணையவுள்ளனர்.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில் பதில் வீரர்களாக இவர்கள் சிம்பாப்பேவுக்கு அனுப்பப்படவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.



யூரோக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# மோல்டோவாவிடம் தோற்ற போலந்து

யூரோக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில், தம்நாட்டில் நேற்று அதிகாலை நடைபெற்ற போலந்துடனான போட்டியை 3-2 என்ற கோல் கணக்கில் மோல்டோவா வென்றது.

தவிர, சுவீடனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை ஒஸ்திரியா வென்றது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 22 ஜூன் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.